



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்




நலன்களை பெறுவதற்கு மனிதன் சாஸ்திரங்களில் கூறப்பட்ட தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். முழுமையாக அனுசரிக்க முடியாவிட்டால் கூட முடிந்த அளவுக்கு அதை பின்பற்ற வேண்டும். தர்மத்தை சிறிதளவு அனுஷ்டிப்பது கூட ஒருவனை பெரும் பயத்திலிருந்து ரக்ஷிக்கிறது. எவ்வளவு குறைபாடுகளுடனும் கூட தன் சொந்த தர்மத்தை அனுஷ்டிப்பது மற்றவனை சார்ந்த தர்மத்தை நன்றாக கடைப்பிடிப்பதையும் விட சிறந்தது என்று பகவான் சொல்கிறார்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## सुभाषितानि
## நல்லுரைகள்

अकृत्यं नैव कर्तव्यं प्राणत्यागेऽप्युपस्थिते । அக்ரு'த்யம்' நைவ கர்தவ்யம்' ப்ராணத்யாகே³(அ)ப்யுபஸ்தி²தே = உயிர் துறக்கும் நிலையிலும் தகாததைச் செய்யக் கூடாது.

अक्के चेन्मधु विन्देत किमर्थं पर्वतं व्रजेत् அக்கே சேன்மது⁴ விந்தே³த கிமர்த²ம்' பர்வதம்' வ்ரஜேத் = வீட்டுக் கொல்லைப் புறத்தில் தேன் கிட்டிடில் ஏன் மலையேற வேண்டும்?

अक्रोधेन जयेत्क्रोधम् । அக்ரோதே⁴ன ஜயேத்க்ரோத⁴ம் = கோபத்தைக் கோபமின்மையால் வெல்ல வேண்டும்.

अक्षोभ्यतैव महतां महत्त्वस्य हि लक्षणम् । அக்ஷோப்⁴யதைவ மஹதாம்' மஹத்த்வஸ்ய ஹி லக்ஷணம் = பெரியோரின் பெருமைக்கு இலக்கணம் கலங்காதிருத்தலே.


Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

अर्थागमो नित्यमरोगिता च प्रिया च भार्या प्रियवादिता च |
वश्यश्च पुत्रोऽर्थकरी च विद्या षड् जीवलोकस्य सुखानि राजन् ||
அர்தா²க³மோ நித்யமரோகி³தா ச ப்ரியா ச பா⁴ர்யா ப்ரியவாதி³தா ச |
வஶ்யஶ்ச புத்ரோ(அ)ர்த²கரீ ச வித்³யா ஷட்³ ஜீவலோகஸ்ய ஸுகா²னி ராஜன் ||



ஓ அரசரே! தினமும் பொருளின் வரவு, நோயில்லாமல் இருத்தல், அன்பு கொண்ட மனைவி, பிரியமாகப் பேசுதல் தனக்கு அடங்கிய பிள்ளை, பொருளை அளிக்கும் கல்வி. இந்த ஆறும் இவ்வுலகிலுள்ள மனிதனுக்கு சுகத்தை அளிக்கும்.

षडिमानि विनश्यन्ति मुहूर्त अनवेक्षणात् |
गावः सेवा कृषिर्भार्या विद्या वृषल सङ्गतिः ||
ஷடி³மானி வினஶ்யந்தி முஹூர்த அனவேக்ஷணாத் |
கா³வ: ஸேவா க்ரு'ஷிர்பா⁴ர்யா வித்³யா வ்ரு'ஷல ஸங்க³தி: ..

ஒரு மணி நேரம் பசுக்கள், ஊழியம். பயிர் செய்த பூமி, மனைவி, கல்வி, வேலைக்காரன் செய்யும் வேலை. இவைகளை கவனிக்காவிடில் வீணாகி விடும்.

षडेते हयवमन्यन्ते नित्यं पूर्वोपकारिणम् |
आचार्यं शिक्षिताः शिष्याः कृतदाराश्च मातरम् ||
नारीं विगत कामस्तु कृतार्थश्च प्रयोजघम् |
नावं निस्तीर्णकान्तारा आतुराश्चचिकित्सकम् ||
ஷடே³தே ஹ்யவமன்யந்தே நித்யம்' பூர்வோபகாரிணம் |
ஆசார்யம்' ஶிக்ஷிதா: ஶிஷ்யா: க்ரு'ததா³ராஶ்ச மாதரம் ..
நாரீம்' விக³த காமஸ்து க்ரு'தார்த²ஶ்ச ப்ரயோஜக⁴ம் |
நாவம்' நிஸ்தீர்ணகாந்தாரா ஆதுராஶ்சசிகித்ஸகம் ..

கல்வி கற்று முடித்தவர்கள் ஆசார்யனையும், மனைவியை மணந்து கொண்டவர்கள் தாயையும், காமம் நீங்கினவன் பெண்டிரையும், உதவியை அடைந்தவர்கள் உதவி செய்தவனையும், நதியைத் தாண்டி கரையை அடைந்தவன் தோணியையும், வியாதி நீங்கினவன் வைத்யனையும் அவமதிப்பார்கள் (இந்த ஆறு பேர்களும் முன்பு உபகரித்த வர்களையும் மறந்து விடுவார்கள் எனக் கருத்து).

(தொடரும்….)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

## பாபங்கள் பத்து வகை

மனிதனுடைய வாழ்க்கையில் இருக்கும் ஓர் ஆச்சர்யமான விஷயத்தை மஹான் வித்யாரண்யர் ஓரிடத்தில்,

புண்யஸ்ய பலமிச்சந்தி புண்யம் நேச்சந்தி மானவா:
ந பாபபலமிச்சந்தி பாபம் குர்வந்தி யத்னத:

என்று குறிப்பிட்டுள்ளார்.




மனிதனுக்கு சுகத்தை அடைய வேண்டும் என்னும் ஆசை சகஜமாகவே இருக்கின்றது. சுகம் என்பது புண்ணியத்தால் உண்டாகும் என்று சாஸ்திரம் சொல்கிறது. அது அவனுக்குத் தெரியும். அதேபோல், மனிதன் தனக்கு என்றுமே துக்கம் வேண்டாம் என்றும் நினைக்கிறான். மேலும், துக்கம் என்பது முன்பு செய்த கர்மத்தினால் தான் உண்டாகும் என்றும் சாஸ்திரம் சொல்கிறது. இதுவும் அவனுக்குத் தெரியும். சுகம் மட்டும் தனக்கு வேண்டும் என்று விரும்பும் மனிதன் சுகத்துக்குக் காரணமான புண்ணிய கர்மத்தை மட்டும் செய்வதில்லை. துக்கம் தனக்கு வேண்டாம் என்று சொல்லும் அவன் பாபத்தை மட்டும் விடுவது இல்லை.

பாபம் குர்வந்தி யத்னத:

என்று சொல்லப்பட்டுள்ளது போல, மக்கள் பாவச் செயல்களை முனைந்து செய்கின்றனர். இது ஓர் ஆச்சர்யமான விஷயமல்லவா? நன்றாகப் படித்தால் பாஸாகலாம்; ஆனால், பையன் படிப்பதில்லை. தான் ஜெயிலுக்குப் போகக் கூடாது என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால், திருட்டுத்தனத்தை மட்டும் திருடன் விடுவதில்லை. இதெல்லாம் நம் அனைவரின் அனுபவத்திலும் இருக்கிறது.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

காமம் ஹஸந்தி லோகா: கைலாஸவிலாஸ வர்ணனாவஸரே|
ஸாதனகதனாவஸரே ஸாசீ குர்வந்தி வக்த்ராணி ||

கைலாசம், ஸ்வர்க்க சுகம், காமதேனு, கற்பகவிருக்ஷம், சிந்தாமணி முதலியவை பற்றிப் புராணங்களில் சொல்லப்பட்டுள்ள வர்ணணையைக் கேட்கும் போது, "ஆஹா! எவ்வளவு நன்றாக இருக்கிறது? எனக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆனால், அவை. கிடைப்பதற்கு வேண்டிய சாதனங்களை என்னென்ன முறையில் அனுஷ்டிக்க வேண்டும் என்று சொன்னால், ஜனங்கள் ஒவ்வொருவராக எழுந்து போய் விடுவார்கள்.

ஸாதனகதனாவஸரே ஸாசீ குர்வந்தி வக்த்ராணி |

"ஸாதனங்கள் அனைத்தையும் என்னால் அனுஷ்டிக்க முடியாது" என்பர் பலர். இதனால் ஸாதனங்களைப்பற்றிக் கேட்கவே அவர்களுக்கு விருப்பமில்லை. மேலும் மனிதன், தனக்கு நல்லது எது? கெட்டது எது? என்ற விவேகம் செய்யாமலிருப்பது ஒரு காரணம். ஆனாலும், ஒவ்வொருவனும் தான் செய்யும் காரியம் சரி என்றுதான் கூறிக் கொண்டிருப்பான். திருட்டுத்தனம் செய்கின்ற திருடன்கூட, "நான் சரியான காரியத்தைத்தான் செய்கிறேன்" என்று தர்க்கம் செய்வான். அது எப்படி என்று கேட்டால், அவனுக்கும் தர்க்கம் இருக்கிறது. "நான் என்ன குற்றம் செய்தேன்? எனக்கும் மனைவி, குழந்தைகள் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரையும் நான் காப்பாற்ற வேண்டும். எனக்கோ பணம் கிடையாது. கவர்மெண்டில் எனக்கு ஒரு வேலையும் கொடுக்கப்படவில்லை. அதனாலே அந்தப் பணக்காரர் வீட்டுக்குப் போனேன். அவரிடம் பணம் கொட்டிக் கிடக்கின்றது. அவருக்கு அவற்றை என்ன செய்ய வேண்டும் என்பதே புரியவில்லை. எனக்கு வேண்டிய அளவுக்கு மட்டும் எடுத்துக் கொண்டு வந்தேன்; அதிகமாகக் கொண்டு வரவில்லை. அதனால் என் சம்சாரம், குழந்தைகள் எல்லோரும் பிழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் என்ன தவறு செய்தேன்?" என்று அவனும் ஒரு தர்க்கம் செய்யலாம். இப்படி ஒவ்வொருவனும், தான் செய்கின்ற காரியம் நல்ல காரியம்தான் என்று சாதிப்பதற்கு முயற்சிக்கிறானே ஒழிய, இது சரியா, தவறா என்று விவேகம் செய்கின்ற அளவிலே யாரும் இல்லை. பகவான் கீதையிலே சொல்லியிருக்கின்றார்:

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ஞாத்வா
சாஸ்த்ரவிதானோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி "

(தொடரும் .....)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஶ்ரீ ஸூக்தம்

16. யார் திருமகளின் அருளை வேண்டுகிறானோ, அவன் தூயவனாகவும் புலன்களை அடக்கியவனாகவும் இருக்குகொண் தினமும் நெய்யால் ஹோமம் செய்ய வேண்டும். திருமகளின் மேற்கண்ட பதினைந்து மத்திரங்களையும் எப்போதம் ஜபம் செய்ய வேண்டும்.




17. பிரபலமானவர்களும் முனிவர்களுமான ஆனந்தர், கர்தமர், சிக்லீதர் ஆகிய மூவரும் இந்த ஸூக்தத்தின் ரிஷிகள்: மகாலட்சுமியே தேவதை.

18. தாமரை போன்ற முகத்தவளே, தாமரை போன்ற கால்களை உடையவளே, தாமரை போன்ற கண்களை உடையவளே. தாமரையில் தோன்றியவளே, நான் எதனால் வளம் பெறுவேனோ அதை எனக்கு நீ அருள்வாய்!


19. குதிரைகளைத் தருபவளும், பசுக்களைத் தருபவளும், செல்வத்தைத் தருபவளும், செல்வத்தின் தலைவியுமான மகாலட்சுமியே! எல்லா ஆசைகளும் நிறைவேறுவதால் வரும் இன்பத்தைத் தருகின்ற செல்வத்தை எனக்கு அருள்வாய்!

20. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், செல்வம், தானியம், யானை, குதிரை, முதலியவையும் பசுக்கள், தேர்கள் எல்லாம் தருவாய்! மக்களுக்கு நீ தாயாக இருக்கிறாய். என்னை நீண்ட ஆயுள் உள்ளவனாக ஆக்குவாய்!

(தொடரும்..)



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)



உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

(பரிமேலழகர் உரை: உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல் அனைத்தே யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து" 'இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும்' என நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து, புலவர் தொழில் கற்றறிந்தார் தொழில்) அதாவது, கற்பிப்பவர் விஷயத்தில், 'இனி இவரை மீண்டும் எப்பொழுது பார்ப்போம்' என்று அவரிடம் கற்பவர் மனதில் தோன்றுமாம். 'புலவர் தொழில்' என்று கூறியதால் கற்பிப்பதன் இன்றியமையாமை தெரிகிறது.

கற்றார் அவையின் முன் தாம் கற்றதை உரைப்பதன் பெருமையைக் கீழ்க்காணும் குறள்கள் கூறுகின்றன:

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார கத்து

(பரிமேலழகர் உரை: கசடறச் சொல்தெரிதல் வல்லாரகத்து - வழுப்படாமல் சொற்களை ஆராய்தல் வல்லார் அவைக்கண் சொல்லின், கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களையும் கற்று அவற்றின் ஆய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.)

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்கக் கொளல்

(பரிமேலழகர் உரை: கற்றார்முன் கற்ற செலச் சொல்லி - பல நூல்களையும் கற்றார் அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றாற் சொல்லி, தாம் கற்ற மிக்காருள் மிக்க கொளல் - அவற்றின் மிக்க பொருள்களை அம்மிகக்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கற்றாரிடத்து அறிந்து கொள்க. எல்லாம் ஒருவற்குக் கற்றல் கூடாமையின், வேறுவேறாய கல்வியுடையார் பலர் இருந்த அவைக்கண் தாம் கற்றவற்றை அவர்க்கு ஏற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவர்.

ஆதலான், ஏனை கற்கப்பெறாதன கேட்டறியலாம் என்பதாயிற்று.")

இனி, கல்வியறிவு சார்ந்த அறிவாற்றல் தாம் கற்றவற்றைப் பிறருக்கு விரித்துரைக்கும் போது வெளிப்படுகிறது என்று முதலில் கூறிவிட்டு. இப்போது பிறருக்கு விரித்துரைப்பதால் ஒருவரின் அறிவாற்றல் மேம்படுகிறது என்று கூறுவது முரணாகாதா என்ற கேள்வி எழக்கூடும். இது முரணல்ல; ஏனெனின், அறிந்ததிலிருந்து அறியாததைச் சிந்தித்து புது அறிவைச் சேர்ப்பதே அறிவாற்றல் ஆகும். இது கல்விசார் அறிவாற்றல் மட்டுமன்றி அறிவாற்றலின் பொதுவான வரையறை என்பது இன்னாளைய ஆய்வாளர்களின் கருத்து. இதை இவ்வியலின் அடுத்த பகுதியில் விரித்துக் கூறவுள்ளோம்.

இதுவரை கல்விசார் அறிவாற்றலின் கூறுகளையும் அவற்றின் வெளிப்பாடு பற்றியும் பார்த்தோம். இனி, இவை எந்த வகைகளில் ஆசார்யாளின் ஆளுமையாக வெளிப்பட்டன என்பதை ஆராய்வோம். ஆசார்யாளின் கல்விப் பயிற்சி மூன்று காலக் கட்டங்களில் அமைந்தது என்பது அவருடைய சரித்திரத்திலிருந்து தெரிகிறது. சிறு வயதில் பெங்களூரில் பள்ளிக் கல்வி, பின் சிருங்கேரியில் பிரம்மசாரியாகக் கல்வி கற்றது, துறவறம் மேற்கொண்ட பின் தமது குருவிடமும் பண்டிதர்கள் சிலரிடமும் கற்றது என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். ஆசார்யாளின் பள்ளிக்கூடக் கல்வி எட்டாம் வகுப்புடன் நின்றது. அவர் சிருங்கேரிக்கு வருவதற்கு முன் பெங்களூரில் எட்டாவது வகுப்பு வரையில் படித்தார் என்பதையும் அவருடைய தந்தையார் ஸ்ரீ கைபு ராமா சாஸ்திரிகள் ஒரு முனிசிபல் பள்ளிக் கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார் என்பதையும் அறிகிறோம்:

"ஸ்ரீனிவாஸர் ஆரம்பத்தில் பூர்ணையா சத்திரத்தில் உள்ள முனிசிபல் ப்ரைமரி மாணவர் பள்ளிக்கூடத்தில் வாசித்தார். பின்பு பளே பேட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ய வித்யாசாலையில் சேர்ந்தார். இங்கு 8-வது வகுப்பு வரையில் படித்தார்...."

ஆசார்யாள் தம்முடன் படித்தவர்கள் சிலருக்குக் கல்வி கற்பித்து உதவுவது அக்காலத்திலேயே அவர் வழக்கமாக இருந்தது:

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

#### அத்தியாயம் - 4

#### ஆசாரம்



சௌளம் நடந்தாலும் சிகை போய்விடுகிறது. உபநயனம் நடந்தாலும் ஸந்த்யோபாஸனாதிகளைக் கற்றுக்கொடுப்பதில்கூட பெற்றோர்கள் அக்கரை செலுத்துவதில்லை. கிரஹஸ்தாசிரமமோ ஆசிரமம் என்ற பெயருக்கே லாயக்கன்னியில் வெறும்காமபரமாய் ஆகிவிட்டது. அதற்கு அனுகூலமாக விவாஹரத்து, புனர்விவாஹம் முதலான ஸௌகர்யங்களையும், ஸந்ததி நியமம் என்ற பெயரால் கர்ப்பவிச்சேதத்திற்கும் வியபிசாரத்திற்கும் வேண்டிய ஸௌகர்யங்களையும், புது நாகரீக மோகத்தில் அகப்பட்டவர்கள் செய்துகொடுக்க முன்வருகிறார்கள். பர்த்தாவை இழந்த அல்லது பர்த்தாவிடமிருந்து பிரிந்த ஒரு ஸ்த்ரீ மற்றொரு புருஷனை ஆசிரயித்தால் அவளை வியபிசாரிணீயென்று சொல்லக்கூடாதென்று சட்டம் போடலாமே தவிர, அவள் வாஸ்தவத்தில் வியபிசாரிணீதான் என்பதையாவது அவளுக்கு பாபமும் அதற்குரிய சாஸ்திரீய தண்டனையும் உண்டென்பதையாவது மாற்றுவதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாதென்பதை மறந்துவிடுகிறார்கள்.

இவ்விதம் பலவித துராசாரங்கள் மேலிட்டு வருவதைப் பார்த்து துக்கப்படும்படி இக்காலத்தில் ஜன்மம் எடுக்கும்படி செய்திருக்கும் நம் பாபத்தைத்தான் நினைத்து நினைத்து நொந்து கொள்ள வேண்டும். சேற்றில் முளைத்த தாமரை இலை எப்படி சேற்றால் தூஷிக்கப்படாமல் இருந்துவருகிறதோ, அது மாதிரி நாம் இருந்து வந்தால்தான் க்ஷேமம் அடையலாம். இது கூட நம் ஸ்திதியை காட்டக்கூடிய நல்ல திருஷ்டாந்தமாகாது. சாக்கடைப் புழு, சாக்கடை ஜலத்தில் உண்டானாலும் அதிலேயே பிறண்டாலும் எப்படி மேலே ஒட்டாமல் இருந்துவருகிறதோ அப்படி நாம் இருந்து வரவேண்டியிருக்கிறது. தற்கால ஜனஸமூஹத்தின் மத்தியில்தான் நாமும் இருந்து வரவேண்டியிருக்கிறது. உலகத்தை திருத்துவது நம்மால் முடியாத கார்யம். பகவானே அவதாரம் எடுத்துவந்து பார்த்தாலும் உலகத்தில் அதர்மம்

இருந்தே தீரும். ஆகையால் அவ்வதர்மத்தால் நாம் கூடியமட்டும் பாதிக்கப்படாமல் நம்மைக் காப்பாற்றிக்கொண்டு ஆசாரத்துடன் நம் வாழ்நாட்களை நடத்திக்கொண்டு வந்து आचारप्रभवो धर्मः धर्मस्य प्रभुरच्युतः என்பதை ஞாபகம் வைத்துக்கொண்டு பகவானையே சரணமாக நம்பி ஆச்ரயிப்போமானால், இக்கலிகாலத்திலும் நாம் சிரேயஸ் அடையலாமென்பது நிச்சயம். இவ்விதம் த்ருடமான சிரத்தையும் பக்தியும் ஏற்படவேண்டுமென்றும் அவைகள் மூலமாய் ஸத்கர்ம நிரதர்களாகி பகவானுடைய கருணைக்கு நாம் பாத்திரமாக வேண்டுமென்றும் பிரார்த்திப்போமாக!

## அத்தியாயம் - 5
## ஆஹார சுத்தி

நாம் ஜகத்தின் மத்தியில் இருக்கிறபடியினால், ஜகத்திலுள்ள பதார்த்தங்கள் நம்மை பிரதிக்ஷணமும் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. இதுவும் தவிர, நாம் ஜீவித்திருக்க வேண்டுமேயானால், வெளியிலுள்ள பதார்த்தங்களை நம்முடைய சரீரத்திற்குள் சேர்த்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. வெளிப்பதார்த்தங்கள் சேருவதனாலேயே நம் சரீரம் இருக்கவும் சேஷ்டிக்கவும் முடிகிறது. ஆகையால் வெளிப்பதார்த்தங்களை நம் சரீரத்துடன் சேர்க்கும் போது மிகவும் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. மேலும் இந்தப் பதார்த்தங்கள் நம்முடைய சரீரத்துடன் இந்திரியங்களையும், பிராணனையும், மனதையும் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், இன்னும் வெகு ஜாக்ரதையாக இருப்பது அவசியம்.

சாந்தோக்யோபநிஷத்தில் நாம் உட்கொள்ளும் அன்னம் சரீரத்திற்குள்போய் அது மூன்று விதமாக மாறி, ஸ்தூலமாக இருக்கும் அம்சம் மலத்துடன் சேர்ந்து வெளியில் போய்விடுகிறதென்றும், மத்தியமமாய் இருக்கும் அம்சம் மாம்ஸமாக மாறுகிறது என்றும், ஸூக்ஷமமானஅம்சம் மனதுடன் சேருகிறது என்றும் சொல்லப்படுகிறது. அப்படியே திரவமாக உட்கொள்ளும் பதார்த்தங்களின் ஸ்தூல அம்சம் மூத்திரமாகி வெளியில் போய்விடுகிறது. மத்யமமான அம்சம் ரத்தமாக மாறுகிறது, ஸூக்ஷ்மமான அம்சம் பிராணனுடன் சேருகிறது என்றும் காண்கிறது. அப்படியே தேஜோமயமான பதார்த்தங்கள் உள்ளே போய் ஸ்தூலமான அம்சம் எலும்பாகவும், மத்யமமான அம்சம் மஜ்ஜையாக மாறுகிறது என்றும், ஸூக்ஷ்மமான அம்சம் வாக்குடன் சேருகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நம்முடைய மனது, ப்ராணன், வாக்கு இவைகள் சுத்தமாக இருக்கவேண்டுமானாலும் உட்கொள்ளுகிற பதார்த்தம் அதற்குத் தக்கதாக இருக்கவேண்டுமென்பது தீர்மானமாகத் தெரிகிறது.
(தொடரும் …) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

पशुपः शिवोऽयमिति तं विहाय किं वाक्ततिप्रदामाशु।
पशुतानिवृत्तयेऽयं वृषभस्त्वां सेवते मातः ||19||

பஶுப: ஶிவோ(அ)யமிதி தம்’ விஹாய கிம்’ வாக்ததிப்ரதா³மாஶு.
பஶுதாநிவ்ரு’த்தயே(அ)யம்’ வ்ரு’ஷப⁴ஸ்த்வாம்’ ஸேவதே மாத: ||19||




தாயே ! பசுவைப் பசு (கால் நடைப் பிராணி)வாக இருக்கக் காப்பாற்றுபவர் இந்த சிவன் என்றுணர்ந்த இந்தக் காளை தன் பசுத் தன்மை நீங்க, உடன் பேச்சு வன்மை தருகிற உன்னை வழி படுகிறதோ? (19)

शार्दूलचर्म परिवीक्ष्य भवाङ्गसंस्थं भीतः पलाय्य तव सन्निधिमागतः किम् ।
उक्षाधिपः सरसिजासनधर्मपत्नि ब्रह्मद्य संशयनिमग्नमतेर्ममाशु ||20||

ஶார்தூ³லசர்ம பரிவீக்ஷ்ய ப⁴வாங்க³ஸம்’ஸ்த²ம்’ பீ⁴த: பலாய்ய தவ ஸந்நிதி⁴மாக³த: கிம் .
உக்ஷாதி⁴ப: ஸரஸிஜாஸனத⁴ர்மபத்னி ப்³ரஹ்மத்³ய ஸம்’ஶயநிமக்³னமதேர்மமாஶு ||20||

தாமரைமீது அமர்ந்த பிரும்மாவின் தர்ம பத்தினியே சிவனது உடலில் ஆடையாக உள்ள புலித் தோலைக் கண்டு பயந்து காளை உன் ஸந்நிதியை நோக்கி ஓடிவந்துள்ளதோ? சந்தேகத்தில் ஆழ்ந்த புத்திகொண்ட எனக்கு இன்று சீக்கிரமாக இதனை விளக்குவாய்.(20)


(தொடரும் ...)



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

### அத்யாத்ம ராமாயணத்தின் பெருமையும் பயனும்

இதனைக் கேட்ட முனிவர், பிரும்மாவைப் பார்த்துக் கூறினார் : 'முன்னரே, தங்களிட மிருந்து, நல்வினை-தீவினை பற்றி முழுமையான விளக்கத்தைக் கேட்டுள்ளேன். 'அமரர்களில் தலையாயவரே! இப்போது, ஒன்று மட்டும் நான் கேட்க விரும்புகிறேன். என்னிடம் தங்களுக்கு அருளுள்ளம் இருக்குமானால், அது ரகசியமானதாக இருந்தாலும், விளக்கிக் கூற வேண்டும்.



கொடுமையான கலியுகம் தொடங்கிவிட்டால், மனிதர்கள் நல்ல கர்மாக்கள் செய்வதில் மனம் ஈடுபடாததால் புண்ணியத்தைப் பெறமாட்டார்கள்; தீய நடத்தையில் ஈடுபடுவார்கள்; உண்மை பேசுவதை விட்டுவிடுவார்கள். பிறர் நிந்தனையில் ஈடுபட்டிருப்பருப்பார்கள்; பிறர் சொத்துக்களை அடைய விரும்புவார்கள்; பிறர் மனைவிக்கு ஆசைப்படுவார்கள்; பிறரைத் துன்புறுத்துவதில் பெரு நோக்கமுடையவர்களாக இருப்பார்கள்.

உடலையே ஆத்மாவாக எண்ணும் அறிவிலிகளாக இருப்பார்கள்; கடவுள் நம்பிக்கை அற்றவர்களாகவும் விலங்கினத்தையொத்த அறிவுடையவர்களாகவும் தாய்-தந்தையிடம் வெறுப்புக் கொண்டவர்களாவும், பெண்ணாதிக்கத்துக்கு அடிபணிந்தவர்களாகவும், காமவசப்பட்டவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள். அந்தணர்கள், பேராசை என்ற கோளினால் பீடிக்கப்படுவார்கள்; வேதத்தை விற்றுப் பிழைப்பார்கள்; பொருள் சம்பாதிப்பதற்காகவே வேத-சாஸ்திரக்கல்வி கற்பார்கள்; கர்வத்தால் அறிவு மயங்கி நிற்பார்கள்.

க்ஷத்திரியர்களும் வைசியர்களும் கூட, பெரும்பாலும் தங்களுடைய தர்மத்தை விட்டவர்களாகவும் தங்கள் ஜாதிக்குரிய கர்மாக்களை கைவிட்டவர்களாகவும் பிறரை வஞ்சிப்பவர்களாகவும் இருப்பார்கள். அதுபோலவே, வேளாளர்களும் அந்தணருக்குரிய ஆசாரங்களில்

ஈடுபாடுடையவர்களாகவும், பெண்கள், பொதுவாக, ஒழுக்கம் குன்றியவர்களாகவும் கணவரை அவமதிப்பதில் அச்சமில்லாதவர்களாகவும் இருப்பார்கள். நிச்சயமாக, பெண்கள், மாமனார்-மாமியாருக்குத் துரோகம் செய்வார்கள். இவ்விதமாக, நல்லறிவை இழந்தவர்களுக்கு சுகமான மேலுலகம் எவ்வாறு கிடைக்கும்?

இவ்வித எண்ணங்களால் என்னுடைய மனம் எப்போதும் கவலை கொண்டுள்ளது. இவர்களுக்கு, எளிய உபாயங்களால், நற்கதி எவ்வாறு ஏற்படும்? தாங்கள் எல்லாம் அறிந்தவர். அதனால், அந்த எளிய முறைகளை முழுமையாக எனக்குக் கூறவேண்டும்.' நாரத முனிவருடைய சொற்களைக் கேட்டக் கமலாஸனரான பிரும்மா, 'முனிவரே! நீங்கள் ஒரு நல்ல விஷயத்தைக் கேட்டிருக்கிறீர்கள். நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேளுங்கள்.

முன்னர் ஒருகாலத்தில் அடியார்களிடம் பேரன்பு கொண்ட பார்வதி தேவி, ஸ்ரீராம தத்துவத்தை அறிந்து கொள்ள விரும்பியவளாய், முப்புரங்களை எரித்த பரமேசுவரனைப் பார்த்து, அதை உபதேசிக்க வேண்டும் என வணக்கத்தோடு கேட்டாள். மனத்துக்குகந்த மலைமகளுக்குத் தானே ரகசியமாக எதை விளக்கினாரோ, அதுவே உத்தமமான அத்யாத்ம ராமாயணம் என்ற புராணமாகப் பிரசித்தி பெற்றது. அதனை இரவு பகலாக மிகவும் மரியாதையோடு எண்ணி எண்ணி, எப்போதும் ஆத்மானந்தத்தில் மூழ்கி நிற்கிறாள், உலகமாதாவான பார்வதி தேவி.

பிராணிகளின் நற்பேற்றினால், அந்தப் புராணம், உலகில் பிரசாரம் அடைந்தால், அதைப் படித்த அளவிலேயே மக்கள் நல்ல கதியை அடைவார்கள். உலகில் அத்யாத்ம ராமாயணம் வெளிப்படாத வரையில், பிரும்மஹத்தி முதலான மகாபாவங்கள் இருந்து கொண்டிருக்கும். உலகில் அத்யாத்ம ராமாயணம் வெளிப்படாத வரையில், கலியின் களியாட்டம் நிச்சயமாக இருந்து கொண்டிருக்கும்.

உலகில் அத்யாத்ம ராமாயணம் வெளிப்படாத வரையில், வீரர்களான யமதூதர்கள் அச்சமில்லாமல் உலவிக் கொண்டிருப்பார்கள். உலகில் அத்யாதம் ராமாயணம் வெளிப்படாத வரையில், அறநூல்களிடையே பரஸ்பரம் வேறுபாடுகள் விவாதிக்கப்படும்: அது வரையில், மகான்களுக்கும் ஸ்ரீராமனுடைய திருவடிவம் அறியவொண்ணாததாக இருக்கும் (தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்